செய்தி வெளியீடு எண்: 977 நாள்:19.12.2020

**இன்று (19.12.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், எட்டிக்குட்டைமேட்டில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை திறந்து வைத்து ஆற்றிய உரை:**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.

கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், எட்டிக்குட்டைமேட்டில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கிற அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு, ஏழை, எளிய, ஒடுக்கப்பட்ட, மக்கள் எங்கு அதிகமாக வாழ்கின்றார்களோ அந்தப் பகுதிகளிலே அம்மக்களுக்கு சிறந்த மருத்துவ சிகிச்சை செய்ய வேண்டுமென்பதற்காகத்தான் என் தலைமையில் இருக்கின்ற அம்மாவின் அரசு முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் என்ற அற்புதமான திட்டத்தை தொடங்கி செயல்படுத்தி கொண்டு இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் 2,000 முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக் தொடங்க உத்தரவிட்டு, இப்போது படிப்படியாக தொடங்கிக் கொண்டிருக்கிறோம்.

அம்மா மினி கிளினிக்கில் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையிலும் நோயாளிகளுக்கு பரிசோதனை செய்து உரிய மருத்துவ சிகிச்சை அளிப்பார்கள். ஒவ்வொரு அம்மா மினி கிளினிக்கிலும் ஒரு எம்.பி.பி.எஸ். மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு உதவியாளர் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்களுக்கு ஏதாவது காய்ச்சலோ தலைவலியோ வந்தால் உடனடியாக இந்த எட்டிக்குட்டைமேட்டின் சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற மக்கள் மருத்துவர்களை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம். ஏதாவது, கடுமையான நோயால் பாதிக்கப்பட்டிருந்தால் அந்த மருத்துவர் பரிசோதனை செய்து மேல் சிகிச்சைக்கு சேலத்திலுள்ள அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து உரிய சிகிச்சை அளிக்க முடியும். ஏனென்றால், கிராமங்களில் வாழ்கின்ற மக்கள் ஏழை, எளிய மக்கள். இரவு–பகல் பாராமல், வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாமல் உழைக்கின்ற மக்கள். தங்கள் உடலில் என்ன நோய் இருக்கிறதென்றுகூட அறியாத அந்த கிராமப்புற மக்கள், பாமர மக்கள், அவர்களுக்கு இந்த சிகிச்சை அளிக்கின்ற ஒரு திட்டத்தை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கின்றோம். இது ஒரு அற்புதமான திட்டம். இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் நாங்கள் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தியிருக்கின்றோம். நம்முடைய எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில், பெரியசோரகை, இருப்பாளி, மாலை

ஆலச்சம்பாளையம் இப்போது கொங்கணாபுரம் ஒன்றியம் எட்டுக்குட்டைமேட்டில் முதலமைச்சரின் அம்மா மினி கிளினிக்கை நான் திறந்து வைத்திருக்கிறேன்.

இந்த அம்மா மினி கிளினிக்கில், ஆரம்ப சுகாதார நிலையத்தில் என்ன வசதி இருக்கின்றதோ, என்ன மருந்து இருக்கின்றதோ, என்ன மருத்துவம் இருக்கின்றதோ அதே மருத்துவம் இங்கேயும் இருக்கின்றது. ஆகவே, காய்ச்சல், தலைவலி வந்தால் எட்டிக்குட்டைமேட்டின் சுற்றுவட்டாரத்தில் இருக்கின்ற மக்களெல்லாம் இங்கே வந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளலாம்.

இங்கு மட்டுமல்லாமல், நான் ஏற்கனவே சமுத்திரம் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்று திறந்துள்ளேன். எட்டிக்குட்டைமேட்டில் பி.எட்., கல்லூரி கொண்டு வந்துள்ளோம். துணை மின் நிலையம் எட்டிக்குட்டைமேட்டில் வந்திருக்கிறது. சிட்கோ தொழிற்பேட்டை இங்கே வந்திருக்கிறது. கால்நடை மருந்தகம் இங்கே எட்டிக்குட்டைமேட்டில் வந்திருக்கிறது. ஆகவே, இந்த எட்டிக்குட்டைமேடு பகுதியில் மட்டும் 11 திட்டங்களை நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம். இதுமட்டுமல்லாமல், கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு நெடுங்குளத்திலிருந்து தண்ணீர் எடுக்கப்பட்டு எடப்பாடி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி மூன்று ஒன்றியங்களையும் உள்ளடக்கி, ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்தை உருவாக்கி பாதுகாக்கப்பட்ட காவேரி தண்ணீர் இந்த மக்களுக்கு தந்து கொண்டிருக்கிறோம். அதுபோல, சில இடங்களில் மேல்நிலைத்தொட்டி கட்டப்படவில்லை, இங்கேயும் விரிவுபடுத்த வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள், அந்தக் கோரிக்கையை ஏற்று அந்தப் பணியும் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், கொங்கணாபுரம் பேரூராட்சியில் காவல் நிலையம், பேருந்து நிலையம், ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கொடுத்துள்ளோம். ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக தரம் உயர்த்திய அரசு அம்மாவின் அரசு. கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் இவ்வளவு திட்டப் பணிகளை செய்து கொண்டிருக்கிறோம். பள்ளிகளை தரம் உயர்த்தியுள்ளோம். கோணசமுத்திரத்தில் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தியுள்ளோம். அதேபோல, கொங்கணாபுரத்தில் ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இருபாலரும் படித்துக் கொண்டிருந்தார்கள். அங்கேயே பெண்களுக்கென்று மேல்நிலைப் பள்ளியை உருவாக்கித் தந்தோம்.

மேட்டுப்பாளையத்தில் பள்ளியை தரம் உயர்த்திக் கொடுத்திருக்கின்றோம். கொண்டிபாளையத்தில் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்திக் கொடுத்திருக்கின்றோம். பல இடங்களில் மாண்புமிகு அம்மாவின் அரசு பள்ளிகளை தரம் உயர்த்தி, அந்தந்தப் பகுதிகளிலேயே உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித் தந்துள்ளோம்.

இதற்கும் மேலாக, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்ற பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று எடப்பாடியிலிருந்து சங்ககிரி போகின்ற வழியிலே கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியிலே, பிரம்மாண்டமான அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடுத்திருக்கின்றோம். சுமார் 1,600 மாணவ, மாணவியர் கல்வி பயின்று வருகிறார்கள். ஆகவே, மக்கள் என்னென்ன கோரிக்கைகள் வைத்தீர்களோ அத்தனை கோரிக்கைகளையும் நாங்கள் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல, வெள்ளாளபுரம் ஊராட்சியில் மாதிரிப் பள்ளி வேண்டுமென்று கேட்டார்கள், அங்கேயே கட்டிக் கொடுத்திருக்கிறோம். என்னென்ன திட்டங்கள் வேண்டுமென்று இந்த ஊராட்சியில் இருக்கின்ற பொதுமக்கள் கோரிக்கை வைத்தீர்களோ அவற்றையெல்லாம் படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக பல்வேறு சாலைகளை சீரமைத்திருக்கின்றோம். ஊராட்சிகளில் வருகின்ற கிராமப்புற சாலைகளை தார்ச்சாலைகளாக அமைத்துக் கொடுத்திருக்கின்றோம். அதுமட்டுமல்ல, திருச்செங்கோட்டிலிருந்து சங்ககிரி–கொங்கணாபுரம்–ஓமலூர் வரை 4 வழிச்சாலையாக அமைப்பதற்கு டெண்டர் விடப்பட்டிருக்கிறது, அந்தப் பணியும் விரைவிலே தொடங்கும்.

இது வேளாண் பெருமக்கள் நிறைந்த பகுதி, இன்றைக்கு நிலத்தடி நீர் கீழே சென்று விட்டது, 800 அடி, 900 அடி போர் போட்டால்தான் தண்ணீர் கிடைக்க வேண்டிய சூழ்நிலை. ஆகவே, வேளாண் பணிக்கு தேவையான நீர் கிடைப்பதில்லை, குடிப்பதற்குத் தேவையான நீர் கிடைப்பதில்லை. ஆகவே, இங்கே இருக்கின்ற பொதுமக்கள், விவசாய பெருங்குடி மக்கள் மேட்டூர் அணை நிரம்பி உபரியாக வெளியேறுகிற நீர் கடலில் வீணாகக் கலக்கிறது. அப்படி அணை நிரம்பி உபரியாக வெளியே போகின்ற நீரை, இந்த வறண்ட பகுதியிலிருக்கின்ற ஏரிகளுக்கு நீங்கள் கொண்டு வந்து நிரப்ப வேண்டுமென்று கோரிக்கை வைத்தீர்கள். 568 கோடி ரூபாயில் 100 வறண்ட ஏரிகளை நிரப்புவதற்கு திட்டமிட்டு நானே வந்து அடிக்கல் நாட்டி, இன்று அந்தப் பணிகள்

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பணிகள் பிப்ரவரியில் நிறைவு பெறுகின்ற சூழ்நிலை இருக்கிறது. நிறைவு பெற்றவுடன் நானே வந்து திட்டத்தைத் தொடங்கி வைப்பேன். அப்படித் திட்டத்தைத் தொடங்கி வைக்கின்றபோது மேட்டூரில் இருக்கின்ற உபரி நீரை, நீரேற்று மூலமாக ஏரிகளில் நிரப்பி, நிலத்தடி நீரை உயர்த்தும்போது வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர் கிடைக்கும், குடிப்பதற்குத் தேவையான நீர் கிடைக்கும். ஆகவே, இப்படிப்பட்ட வரலாற்றுச் சாதனையை அம்மாவினுடைய அரசுதான் படைக்க முடியும், படைத்துக் கொண்டிருக்கின்றது.

அதேபோல, நான் சட்டமன்றத்திலே, சட்டமன்றப் பேரவை விதி எண் **110**–ன் கீழ், முதலமைச்சர் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் திட்டத்தைக் கொண்டு வந்தேன். தமிழ்நாடு முழுவதும் இந்தத் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று உத்தரவு வழங்கினேன். அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய பிரச்சனையை அரசின் கவனத்திற்கு எடுத்துச் செல்வதற்கு பதிலாக, அரசு அலுவலர்களே பொதுமக்களை நாடிச் சென்று, அவர்களிடம் மனுக்களைப் பெற்று, அதிலே தீர்வு காணுகின்ற திட்டம்தான் முதலமைச்சர் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் திட்டம். அந்தத் திட்டத்தையும் நான் நடைமுறைப்படுத்திக் காட்டினேன். அந்தத் திட்டத்தின் வாயிலாக பெறப்பட்ட மனுக்களில், பெரும்பாலானவை வயதானவர்கள், உழைக்கும் திறனற்றவர்கள் அளித்தவை ஆகும். அப்படிப்பட்ட அந்த வயதானவர்களுக்கு முதியோர் உதவித் தொகை கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. நானே நேரடியாக வந்து கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் முதியோர் உதவித் தொகை அளித்தேன். அதுமட்டுமல்லாமல், தகுதியான மனுக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் அளித்தோம். பல விவசாய பெருங்குடி மக்களுக்கு, தகுதியான மனுக்களுக்கு பட்டா மாறுதல் செய்து கொடுத்த அரசும் எங்களுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நீண்ட காலமாக ஏரிகள் எல்லாம் தூர்வாராமல் இருந்தது. அப்படி தூர்வாரப்படாத ஏரிகளையெல்லாம் கணக்கிட்டு, ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த ஏரியானாலும் சரி, பொதுப்பணித் துறை ஏரிகளானாலும் சரி, ஒரு குறிப்பிட்ட நிதி ஒதுக்கி, குறிப்பிட்ட ஏரிகளை எடுத்து முழுக்க, முழுக்க விவசாயிகள் பங்களிப்போடு குடிமராமத்துத் திட்டத்தை அமல்படுத்தினோம். அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகிறபோது,

வேளாண் பெருமக்கள் அந்த ஏரிகளில் இருக்கின்ற வண்டல் மண்ணை அள்ளி தங்கள் நிலத்திற்கு இயற்கை உரமாகப் பயன்படுத்தினார்கள். ஒன்று, ஏரி ஆழமாகிறது, மற்றொன்று அந்த வண்டல் மண் விவசாயிகளுக்கு இயற்கை உரமாகப் பயன்படுகிறது. அந்தத் திட்டத்தையும் நான் தான் நிறைவேற்றிக் காட்டினேன். அதுமட்டுமல்ல, பருவ காலங்களில் பெய்கின்ற மழை நீர் ஓடையின் வழியாக நதியின் வழியாக வீணாக கடலில் கலக்கிறது. ஓடையின் குறுக்கே தடுப்பணை கட்டி, நீரைத் தேக்கி, நிலத்தடி நீரை உயர்த்தி வேளாண் பெருமக்களுக்குத் தேவையான நீர் கொடுக்கிறோம். பொதுமக்களுக்குத் தேவையான நீர் கிடைக்க வழிவகை செய்த அரசும் எங்களுடைய அரசு என்பதை பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நதியின் குறுக்கே மேட்டூர் அணையிலிருந்து வெளியேறி கடலிலே கலக்கின்ற உபரிநீரை தடுப்பணை மூலமாக தடுத்து நிறுத்துகின்ற திட்டத்தைக் கொண்டு வந்தோம். ஆதனூர் குமாரமங்கலத்தில் ரூபாய் **325** கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அண்மையில் கரூர் அருகில் நஞ்சை புகளூர் பகுதியில் காவேரி ஆற்றின் குறுக்கே ஒரு கதவணை ரூபாய் **406** கோடி மதிப்பீட்டில் கட்டிக் கொண்டிருக்கின்றோம். அதற்கு மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு.அமித் ஷா அவர்கள் அடிக்கல் நாட்டினார். இப்படி நதிகளிலிருந்து வெளியேறுகின்ற உபரிநீரை தேக்கி நிலத்தடி நீரை உயர்த்தி விவசாயிகளுக்கு கொடுக்கிறோம். இதுபோன்று அற்புதமான திட்டங்களையெல்லாம் நாங்கள் கொடுத்திருக்கிறோம்.

ஆனால் ஒருவருக்கு மட்டும் என்ன நடக்கிறது என்று தெரியவில்லை, யாரென்று உங்களுக்குத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இந்தத் தொகுதியில் வந்து முதன்முதலாக தமிழ்நாட்டில் எடப்பாடி தொகுதியில் பிரச்சாரத்தை துவக்கினார். இந்த எடப்பாடி தொகுதி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோட்டை. உங்களைப்போல் எத்தனை கட்சித் தலைவர்கள் வந்து இங்கு பிரச்சாரம் செய்தாலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை வெல்லக்கூடிய சக்தி, எந்த எதிர்க்கட்சிக்கும் கிடையாது. எடப்பாடி தொகுதியில் ஒன்றுமே செய்யவில்லை உங்கள் முதலமைச்சர் என்று அந்த அம்மையார் அவர்கள் சொன்னார்களாம். இவ்வளவு திட்டங்களை நாங்கள் செயல்படுத்தியிருக்கின்றோம். **2011**–க்கு முன்பு எடப்பாடி சட்டமன்றத் தொகுதி எப்படி

இருந்தது, 2011–க்குப் பிறகு, 2020 வரை எடப்பாடி சட்டமன்றத் தொகுதி எப்படி இருக்கிறது, இந்த மக்களைப் பார்த்து கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். இந்தப் பகுதியிலுள்ள மக்களுக்கு என்னென்ன தேவை, நல்ல சாலை வசதி, குடிநீர் வசதி, கல்வி வசதி, மருத்துவ வசதி, வேளாண் பெருமக்களுக்குத் தேவையான திட்டங்கள் போன்று அனைத்தையும் நாங்கள் கொடுத்துள்ளோம். கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மக்களுக்கு இவ்வளவும் நாங்கள் செய்திருக்கின்றோம். அதை நான் பட்டியலிட்டு சொல்லியிருக்கின்றேன்.

இன்றைக்கு அரசுப் பள்ளியில் படிக்கின்ற 41 சதவீத மாணவச் செல்வங்களுக்கு, கடந்த ஆண்டு நீட் தோவு மூலமாக, மருத்துவக் கல்லூரிகளில் 6 இடங்கள் தான் கிடைத்தது. அதை நான் சிந்தித்துப் பார்த்தேன். நானும் அரசுப் பள்ளியில் படித்தவன். ஆகவே, அரசுப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களுக்கு தகுந்த இடம் கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில், 7.5 சதவீதம் உள் ஒதுக்கீடு வழங்கப்படும் என்ற உத்தரவை வழங்கி, அதை நடைமுறைப்படுத்திய அரசும் எங்களுடைய அரசு. சேலம் மாவட்டத்தில் மட்டும் 26 மாணவச் செல்வங்களுக்கு எம்.பி.பி.எஸ் படிப்பதற்கு இடம் கிடைத்திருக்கிறது. அந்த 26 மாணவர்களும் ஆலச்சம்பாளையத்தில் நடைபெற்ற விழாவில் எனக்கு நன்றி சொல்லி பேசிவிட்டுச் சென்றார்கள். நம்முடைய எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 5 பேருக்கு எம்.பி.பி.எஸ். இடம் கிடைத்திருக்கிறது. அடுத்த ஆண்டு, 11 அரசு மருத்துவக் கல்லூரிகளை அம்மாவின் அரசு திறக்கவுள்ளது. அதற்கான பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதில் 1,650 மாணவர்கள் பயில இடம் கிடைக்கும். அந்த 1,650 மாணவர்களில், நாம் அறிவித்த 7.5 உள் ஒதுக்கீட்டின்படி சுமார் 130 மாணாக்கர்களுக்கு மருத்துவ இடம் கிடைக்குமென்று நம்புகிறேன். அடுத்த ஆண்டு சுமார் 430 அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மருத்துவப் படிப்பு இடங்கள் கிடைக்கும் வாய்ப்புள்ளது. இதெல்லாம் வரலாற்றுச் சாதனையல்லவா.

அதுமட்டுமல்ல, கொரோனா வைரஸ் நோய் ஒருவரிடமிருந்து மற்றவருக்கு எளிதாக தொற்றக்கூடிய கடுமையான நோய். அந்த நோயையும் நாங்கள்தான் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறோம். இந்தியாவிலேயே தமிழகம்தான் கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதில் முதல் மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் காணொலிக் காட்சி மூலம், தமிழ்நாடு உட்பட

இந்தியாவிலுள்ள அனைத்து முதலமைச்சர்களுடன் ஆலோசனை நடத்தினார். அந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் சரியான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கின்றார், கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்கு எடுத்த முயற்சி தமிழகத்தில் வெற்றி கண்டிருக்கிறது, அங்கே நோய்ப் பரவல் குறைக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பாராட்டைத் தெரிவித்தார்.

அதுமட்டுமல்ல, கொரோனா வைரஸ் தடுப்புப் பணிகளை சிறப்பான முறையில் தமிழ்நாடு மேற்கொண்டு வருகிறது. இதை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டுமென்று அந்தக் கருத்தையும் சொல்லியிருக்கின்றார். இவ்வளவு கொடிய நோயும், நம்முடைய திறமையால், நம்முடைய மருத்துவர்கள் திறமையால், நமது அரசு அதிகாரிகளினுடைய திறமையால் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றோம். எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம் அப்போது குறிப்பிட்டார்கள், தமிழகத்தில் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த முடியவில்லை, இந்த முதலமைச்சர் திறமையற்ற முதலமைச்சர் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தார். கேரளாவைப் பாருங்கள், டெல்லியைப் பாருங்கள், அங்கே குறைந்திருக்கின்றது, தமிழகத்திலே அதிகரித்திருக்கின்றது என்று சொன்னார்கள். இப்போது டெல்லியைப் பார், கேரளாவைப் பார், இப்போது வாய் பேசமாட்டேன்கிறார்கள். கேரளாவில் 8 ஆயிரம், 10 ஆயிரம் ஒரு நாளைக்கு, அங்கிருக்கிற ஜனத்தொகை சுமார் 4 கோடி தான். நாம் சுமார் 8 கோடி இருக்கிறோம். நம்மில் பாதி பேர் இருக்கும்போது, அங்கே ஏறத்தாழ 8 ஆயிரம், 10 ஆயிரம் தொற்று நோய் ஏற்படுகிறது. ஆனால், ஒரு நாளைக்கு 20 ஆயிரம் பரிசோதனைதான் செய்கிறார்கள். தமிழ்நாட்டில் ஒரு நாளைக்கு 70 ஆயிரம் RT-PCR பரிசோதனை செய்கிறோம். இந்தியாவிலேயே RT-PCR பரிசோதனை செய்கிற ஒரே மாநிலம் தமிழ்நாடு. சரியான பரிசோதனை, சரியான ரிசல்ட். அதனால் நோய்ப் பரவல் தடுக்கப்படுகிறது. அதைத்தான் பாரதப் பிரதமர் அவர்கள் தெரிவித்தார்கள், தமிழகத்திலே RT-PCR பரிசோதனை முறையாக எடுக்கின்றார்கள், முறையாக பரிசோதனை செய்கின்றார்கள், அதனால் அங்கே நோய்ப் பரவல் தடுக்கப்படுகிறது. அதை மற்ற மாநிலங்கள் பின்பற்ற வேண்டுமென்று காணொலிக் காட்சி மூலமாக ஆலோசனைக் கூட்டத்தில் மாண்புமிகு பிரதமர் அவர்கள் தெரிவித்தார். எந்தத் திட்டமாக இருந்தாலும் அம்மாவின் அரசு சிறப்பாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு வேண்டுமென்றே, திட்டமிட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எதுவும் செய்யவில்லை. எடப்பாடி பழனிசாமி திறமையற்ற முதலமைச்சர் என்று சொல்லியிருக்கிறார். இவ்வளவு திட்டத்தையும் நாங்கள் செய்திருக்கிறோம். நாங்களா திறமையில்லாதவர்கள்? சொல்லுங்கள் பார்க்கலாம்.

நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு 6 சட்டக் கல்லூரிகளை தமிழகத்தில் கொண்டு வந்திருக்கிறேன். சேலத்திலிருந்து சங்ககிரி செல்கின்ற சாலையிலே அன்னபூர்ணா காலேஜுக்கு எதிரில், பிரம்மாண்டமாக ரூபாய் 125 கோடியில் சட்டக் கல்லூரி உருவாக்கியிருக்கிறோம். அற்புதமான சட்டக் கல்லூரியை உருவாக்கி, திறமையான சட்ட வல்லுநர்களை உருவாக்கப் போகிறோம். அந்தக் கல்லூரியிலே அனைத்து வசதிகளும் கிடைக்கும். பிரம்மாண்டமான கல்லூரி. ஏற்கனவே இருக்கின்ற கல்லூரிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. தரமான கல்லூரி. தமிழ்நாடு முழுவதும் அறிவித்து கட்டடம் கட்டிக் கொண்டிருக்கின்ற அரசு அம்மாவின் அரசு.

கல்வியிலே புரட்சி மறுமலர்ச்சி ஏற்படுத்தியிருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராக 2011–ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற பிறகு நூற்றுக்கு 32 பேர் தான் உயர்கல்வி படித்துக் கொண்டிருந்தார்கள். இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் எடுத்த முயற்சி, அதைத் தொடர்ந்து அம்மா மறைவிற்குப் பிறகு அம்மா வழியில் வந்த அம்மாவின் அரசு கடும் முயற்சி எடுத்ததன் விளைவாக இந்தியாவிலேயே உயர்கல்வி படிக்கக்கூடியவர்கள் எண்ணிக்கையில் முதன்மையாக தமிழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது. நூற்றுக்கு 49 பேர் உயர்கல்வி படிக்கிறார்கள். நாட்டிலேயே உயர்கல்வி படிப்பதிலே முதல் மாநிலம் தமிழ்நாடு.

மருத்துவ வசதியும் அதேபோலத்தான். இரண்டு கையும் இல்லாத ஒருவருக்கு இரண்டு கையும் பொருத்தி சாதனை படைத்த அரசு அம்மாவினுடைய அரசு. வரலாற்றுச் சாதனை. வேளாண்மைத் துறையிலே உணவு தானிய உற்பத்தியில் தொடர்ந்து முதலிடம் வகித்துக் கொண்டிருக்கிறது.

குடிமராமத்துத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் காரணமாக டெல்டா மாவட்டங்களில் இருக்கின்ற ஏரிகள், குளங்கள் எல்லாம் தூர்வாரப்பட்டதன் விளைவு, அங்கே இருக்கின்ற விவசாயிகள் அந்த வண்டல் மண்ணை எடுத்து அவர்களுடைய நிலத்திற்கு இயற்கை உரமாகப் பயன்படுத்திய காரணத்தினாலே என்றைக்கும் இல்லாத

அளவிற்கு அதிகமான விளைச்சல் டெல்டா மாவட்டத்திலே ஏற்பட்டது. அரசு கொள்முதல் நிலையத்தில் **32.40** இலட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்து சாதனை படைத்தோம். இதற்கு முன்பு அரசு நெல் கொள்முதல் நிலையத்தில் **23** இலட்சம் மெட்ரிக் டன் தான் நெல் கொள்முதல் செய்திருக்கிறார்கள், உச்சபட்சமாக. இன்றையதினம், அம்மாவினுடைய அரசு எடுத்த நடவடிக்கைகள் காரணமாக விவசாயிகளுக்கு சரியான முறையிலே பயிர்க்கடன், இடுபொருள், உரம் எல்லாம் சரியான முறையிலே, சரியான நேரத்திலே கிடைத்ததன் விளைவாக இன்றைக்கு விளைச்சல் அதிகமாக விவசாயிகள் பெற்றிருக்கின்றார்கள். இதெல்லாம் ஒரு சரித்திர சாதனை. இதன் விளைவாக, தேசிய அளவில் கிருஷி கர்மான் என்ற விருதை நம்முடைய வேளாண் துறை பெற்றுக் கொண்டிருக்கிறது. இதெல்லாம் சரித்திர சாதனை இல்லையா **?** இதெல்லாம் ஸ்டாலினுக்கு தெரியாதா **?**

நீர் மேலாண்மைத் திட்டம், நான் ஏற்கனவே சொன்னதைப் போல, இவ்வளவு திட்டங்களும் நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலமாக நீரை சேமிக்கின்ற பணியில் அரசு தொடர்ந்து முயற்சி எடுத்ததன் விளைவாக இன்றைக்கு நாட்டிலிருக்கின்ற அனைத்து மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது **2019–20**ல் தமிழகத்தில் நீர் மேலாண்மையில் முதலிடம் பெற்றிருக்கிறது, தேசிய விருதைப் பெற்றிருக்கின்றோம்.

உள்ளாட்சித் துறையில் பல்வேறு திட்டங்களை, சாதனைகளைப் புரிந்து நூற்றுக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றிருக்கின்றோம். மின்சாரத் துறையிலே உபரி மின்சாரம் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எப்போது மின்சாரம் போகும், எப்போது மின்சாரம் வருமென்றே தெரியாது. அந்த நிலையை மாற்றி உபரி மின்சாரத்தை நாங்கள் தயாரித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இன்றைக்கு உபரி மின்சாரம் தயாரிக்கின்ற காரணத்தால்தான் புதிய, புதிய தொழிற்சாலைகள் தமிழகத்தைத் தேடி வந்து கொண்டிருக்கின்றன. **2019** உலக முதலீட்டாளர் மாநாட்டை சென்னையில் நடத்தியபோது **304** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போட்டார்கள். ரூபாய் **3** இலட்சம் கோடிக்கு மேலாக தொழில் முதலீட்டாளர்கள் தொழில் செய்ய முன் வந்தார்கள். கொரோனா வைரஸ் தொற்று இருந்த காலகட்டத்தில்கூட **60** ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டை ஈர்த்து இந்தியாவில் முதன்மை மாநிலமாக தொழில் துறையில் திகழ்ந்த அரசு அம்மாவினுடைய அரசு. எல்லாவற்றிலும் முத்திரை பதித்துக் கொண்டிருக்கிறோம்.

எத்தனை ஆயிரம் ஸ்டாலின் வந்தாலும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின் திட்டத்தை வெல்லக்கூடிய சக்தி யாருக்கும் கிடையாது. இவ்வளவு திட்டங்கள் உங்கள் ஆட்சியில் நடைபெற்றதா ? இவ்வளவு தொழிற்சாலைகள் வந்திருக்கிறதா ? இவ்வளவு தொழில் முதலீட்டை ஈர்த்திருக்கிறீர்களா ? விவசாயிகளுக்கு இவ்வளவு நன்மை செய்திருக்கிறீர்களா ? கல்விக்கு இவ்வளவு திட்டங்களை செய்திருக்கிறீர்களா ? குடிநீர் பிரச்சனைக்கு முன்னுரிமை தந்திருக்கிறீர்களா ? எதுவுமே கிடையாது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் இவ்வளவு திட்டங்களையும் வாரி, வாரி வழங்கிக் கொண்டிருக்கிறது என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, தைப்பொங்கல் விரைவாக வரவிருக்கிறது. தைப்பொங்கலன்று எல்லா இல்லங்களிலும் தைப்பொங்கல் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். கொரோனா வைரஸ் பரவல் இருந்த காரணத்தினாலே கடுமையாக மக்கள் பாதிக்கப்பட்டார்கள். டெல்டா மாவட்டங்களிலே புயல், கனமழையினால் வெள்ளம், அதனால் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆகவே, தைப்பொங்கலை சிறப்பாக எல்லாத் தமிழர்களும் கொண்டாட வேண்டுமென்பதற்காக, அம்மாவினுடைய அரசு, என் தலைமையில் இருக்கின்ற அரசு, தமிழகத்தில் இருக்கின்ற 2 கோடியே 6 இலட்சம் அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் 2,500 ரூபாய் வழங்கப்படும் என்ற அறிவிப்பை நான் வழங்கினேன். ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் 2,500 ரூபாய் வழங்கப்படும். அதுமட்டுமல்ல, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு கிலோ அரிசி, முந்திரி, திராட்சி, ஏலக்காய், கரும்பு ஒரு துண்டுக்கு பதிலாக ஒரு முழுக் கரும்பு வழங்கப்படும்.

அம்மாவின் அரசைப் பொறுத்தவரை மக்கள் சுபிட்சமாக வாழவேண்டும். மக்களுக்கு குறிப்பறிந்து சேவை செய்ய வேண்டும். காலத்திற்கேற்றவாறு மக்களுக்கு நன்மை கிடைக்க வேண்டும். அதுதான் அரசின் கடமை. அதை நாங்கள் செவ்வனே செய்து வருகிறோம். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர், ஊடகத்திலும், டுவிட்டரிலும் பொங்கல் பரிசு அறிவித்தது சுயநலமென்று போட்டிருக்கிறார். இது என்ன சுயநலமா ? போன வருடம் 1000 ரூபாய் கொடுத்தோம், அன்று நன்றாக இருந்தோம். இப்போது கொரோனாவாலும், புயல், கனமழையாலும் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிப்பது தவறா ? ஏழை மக்களுக்குக் கொடுப்பதை யார் தடுத்து நிறுத்துகிறார்களோ அவர் என்றைக்கும் வென்ற சரித்திரம் கிடையாது. நாங்கள்

ஏழை மக்களை பார்க்கின்றோம், ஏழை மக்களின் எண்ணம் நிறைவேற வேண்டும், அதற்காகத் இந்தத் திட்டத்தை அறிவித்திருக்கின்றோம்.

நான் கிராமத்தில் பிறந்து வளர்ந்தவன். கிராமத்திலிருந்து நகரம் வரை ஏழை மக்களோடு பழகியிருக்கிறேன். ஆகவே, ஒரு பண்டிகை வரும்போது அவர்கள் எப்படி கஷ்டப்படுவார்கள் என்று நன்றாகவே தெரியும். அதுவும், கொரோனா காலத்தில் பட்ட துன்பமும் அதிகம். புயல், கனமழையால் ஏற்பட்ட துன்பம் அதைவிட கடினம். நான் நேரடியாக டெல்டா மாவட்டத்திற்குச் சென்று பார்வையிட்டு வந்தேன். தைத் திருநாள் தான் தமிழர்களுடைய பொன்னான நாள். தைப்பொங்கல் எல்லா தமிழ் இல்லத்திலும் கொண்டாடப்படும். அப்படி சிறப்பாக கொண்டாடுவதற்காக அறிவிக்கப்பட்ட திட்டத்தை, சுயநலத்தோடு அறிவித்ததாக சொல்கின்றார்களே, இது நியாயம்தானா என்பதை பொதுமக்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். என்னைப் பொறுத்தவரை, ஏழை, எளிய மக்களிலிருந்து அனைத்து மக்களும் இன்புற்று வாழ வேண்டும், எல்லோருக்கும் அடிப்படை வசதி கிடைக்க வேண்டும், எல்லோரும் நலமோடும், வளமோடும், செழிப்போடும் வாழ வேண்டுமென்பதுதான் பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் இலட்சியம். அந்த இலட்சியத்தை நிறைவேற்றுவது எங்களுடைய எண்ணம். ஆகவே, யாரைப் பற்றியும் கவலைப்படப் போவதில்லை, மக்களைப் பற்றித்தான் நாங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். மக்களுக்கு என்ன தேவை என்பதை எண்ணி செயல்படுகின்ற அரசு எங்களுடைய அரசு. எதிர்க்கட்சித் தலைவர் வேண்டுமென்றே எதை வேண்டுமானாலும் பேசுவார். இவர் என்ன சொன்னார்? மக்கள் கொரோனாவில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், நிதி கொடுக்க வேண்டுமென்று சொன்னாரா, இல்லையா? அறிவித்தவுடன், இப்போது மாற்றிப் பேசுகிறார். பச்சோந்தி கூட கொஞ்சம் நேரம் கழித்துதான் நிறம் மாறும், ஆனால் அவர் அவ்வப்போது நிறம் மாறுகிறார். மக்கள் உஷாராக இருக்க வேண்டும், இவர்கள் மிகப் பெரிய பித்தலாட்டம் செய்வார்கள். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் என்னவெல்லாம் பேசினார்கள்? 5 பவுனுக்கு குறைவாக வைத்திருந்தால், நாங்கள் ஜெயித்தவுடனே அவர்கள் வாங்கிய கடனை ரத்து செய்வோம் என்றார்களே, ஜெயித்தார்களே, கடனை ரத்து செய்தார்களா? ஆட்சி செய்வது நாங்கள், இவர்கள் எப்படி செய்ய முடியும்? விஞ்ஞான மூளையோடு பொய்யான வாக்குறுதியை கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம். நீங்கள் எப்படி நடைமுறைப்படுத்த முடியும்? எங்களுடைய அரசாங்கம்

உத்தரவு போட்டுதானே நடைமுறைப்படுத்த வேண்டும். அதாவது, நடைமுறைப்படுத்த முடியாத திட்டங்களை அறிவிப்பது, கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவிப்பது, மக்களை ஏமாற்றுவது, அதன் மூலமாக வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவது. வெற்றி பெற்ற பிறகு, நாங்கள் ஆட்சிக்கு வரவில்லையே. நாங்கள் இருக்கும்போது நீங்கள் எப்படி ஆட்சிக்கு வரமுடியும்? ஆட்சியில் இருப்பது நாங்கள். மக்களை எப்படி ஏமாற்றுகிறார்கள் பாருங்கள். கடந்த காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் கொடுப்போம் என்று தேர்தல் அறிக்கையில் வெளியிட்டார். எவ்வளவு பச்சைப் பொய், நிலமற்ற விவசாயிகளுக்கு 2 ஏக்கர் கொடுப்பாங்களாம். சுடுகாட்டிற்கே நிலம் எடுக்க முடியாத நிலையில் இருக்கிறோம். எங்கேய்யா நிலம் எடுத்துக் கொடுத்தீர்கள், கடைசி வரையிலும் நிலத்தை காட்டாமலே போய்விட்டார். பச்சைப் பொய். அவருடைய தேர்தல் அறிக்கை அத்தனையும் பொய்.

ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் வெளியிட்ட அனைத்தையும் நடைமுறைப்படுத்திய ஒரே அரசாங்கம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம். மறுக்க முடியுமா? ஆகவே, வேண்டுமென்றே திட்டமிட்டு, அவதூறு செய்திகளைப் பரப்புவது, வேண்டுமென்றே எங்கள் மீது பழி சுமத்துவது, அதையெல்லாம் மக்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் நல்ல தீர்ப்பை தருவார்கள். உழைக்கின்றவர்கள் என்றைக்கும் வீண் போக மாட்டார்கள், உழைப்போர்தான் வெற்றி பெறுவார்கள். எங்களது இயக்கம் உழைத்துக் கொண்டிருக்கிறது, அரசாங்கம் உழைத்துக் கொண்டிருக்கிறது. இந்த அரசாங்கம் மக்களுடைய அரசாங்கம், மக்களுக்கு என்ன தேவை என்பதை செயல்படுத்துகின்ற அரசாங்கம். இது உங்கள் அரசாங்கம். ஆகவே, உங்கள் அரசாங்கம் உங்களுக்காக அனைத்து நன்மைகளையும் செய்து கொடுக்கும் என்று இந்த நேரத்தில் தெரிவித்து, மிகச் சிறப்பாக, எழுச்சியாக இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற்ற அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**